TAM209F1

## சாணைக்காரன் சலீம்

### ஆதாரம்: Tulika



சலீம் ஒரு சாணைக்காரன். அவன் ஊர் ஊராகச் சென்று பல பொருட்களுக்குச் சாணை தீட்டுவான். ஆனால், அவன் குடும்பத்துக்குத் தேவையான பணத்தைச் சம்பாதிக்க முடியவில்லை.



மறுநாள் காலை சலீம் வீட்டு வாசலில் “நாங்கள் உனக்குச் சில பரிசுகள் கொண்டு வந்து இருக்கிறோம். எங்கள் பற்களையும் நகங்களையும் கூர்மைபடுத்த முடியுமா?” என்றன நரி, குரங்கு, சிறுத்தை, புலி.




எனவே, காட்டைக் கடந்து புதிய ஒரு ஊருக்குச் சானை தீட்டச் சென்றான். திடீரென்று ஒரு சிங்கம் “என் நகங்களும் பற்களும் மழுங்கி விட்டன. அவற்றைச் சானை பிடித்து கூர்மையாக்கு” என்றது.



பயந்து போன சலீம் அவ்வாறே செய்தான். மகிழ்ச்சியடைந்த சிங்கம் ஒரு புதருக்குள் ஓடி, இரண்டு காட்டுக் கோழிகளைக் கொண்டு வந்து சலீமுக்குப் பரிசாகக் கொடுத்தது



**வகுப்பறைச் செயல்பாடு:** இது போல சிறு வயதில் நீ கேட்ட நகைச்சுவைக் கதைகளில் ஒன்றை எழுதி அதற்கான படங்களையும் வரைக.

உதாரணமாக,



ஒரு ஊரில் ஒரு அப்பா, அம்மா, ஒரு பையன் இருந்தார்கள். அவர்கள் வீட்டில் ஒரு நாய் வளர்த்தார்கள். அந்த நாய் ரொம்ப குறும்பு பண்ணும். ஒருநாள் …

(மாணவர்கள் தன் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் அல்லது அக்கம் பக்கத்தில் இருப்பவரிடம் கேட்டு கதைகளைச் சேகரித்து வரலாம். கதையை மாணவர்கள் தங்கள் சொந்த நடையில் எழுதுவற்கான முழு சுதந்திரத்தையும் ஆசிரியர்கள் அளிக்க வேண்டும்)